# தீர்மானம் எண்:- 1

## விலை வாசி உயர்வு

பொதுமக்கள் பயன்படுத்தும் அனைத்து அத்தியாவசிய பொருட்களின் விலைகள் தற்போது மிகக் கடுமையாக உயர்ந்து வருகிறது. இதனால் ஏழை எளிய மக்களுடன் அனைத்துப் பகுதி மக்களும் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஒரு புறம் உலகம் வெப்பமயமாதலால் ஏற்பட்டுள்ள பருவ நிலை மாறுதல்கள் உணவு தானிய உற்பத்தியை பாதித்துள்ளது. மறுபுறம் உலகம் வெப்பமயமாவதை குறைக்க நிலக்கரி, பெட்ரோல், டீசல், மண்ணெண்ணைக்கு பதிலாக உணவுப் பொருட்களை மாற்று எரிபொருளாக பயன்படுத்த அமெரிக்கா போன்ற நாடுகள் தொடங்கி விட்டதால் மக்களுக்குஉணவுப் பொருட்கள் கிடைப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

இடது சாரிகளின் ஆதரவோடு ஆட்சியில் இருந்த முந்தைய ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசாங்கம் முன்பேர வர்த்தகத்தை அத்தியாவசிய உணவு பண்டங்களில் தடை செய்திருந்தது. ஆனால் தற்போதுள்ள ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசாங்கம் கோதுமை உள்ளிட்ட பண்டங்களுக்கு அந்த தடையை நீக்கியதின் விளைவாக உணவு தானிய வர்த்தகம் என்பது சூதாட்டக் களமாக மாறிவிட்டது. சூதாட்டத்தில் மக்களின் வாழ்க்கையை விட லாபமே பிரதானமாக நிற்கும் என்பதை நாம் அறிவோம்.

அமெரிக்காவின் நிர்பந்தத்தால் நமது நாட்டு விவசாயிகளுக்கு வழங்கி வந்த மானியங்கள் வெட்டப்பட்டதும், விவசாய நிலங்களை பன்னாட்டு நிறுவனங்களுக்கு, சிறப்பு பொருளாதார மண்டலங்கள் என்ற பெயரில் தாரை வார்ப்பதும் உணவு தானிய உற்பத்தியின் வீழ்ச்சிக்கு காரணமாகும்.

பொதுவிநியோகத் திட்டத்திற்கான ஒதுக்கீடுகள் குறைக்கப்படுவதும், மானியங்கள் வெட்டப்படுவதும், அதில் வழங்கப்படும் பொருட்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதும், ஏழை எளிய மக்களுக்கு சுமையை அதிகப்படுத்துகிறது. அது மட்டுமல்லாமல், இந்த நடவடிக்கைகள் வெளி சந்தையிலும் விலையேறுவதற்கு ஒரு காரணமாகிறது.

மிகக் கடுமையாக ஏறி வரும் விலைவாசியை குறைக்க, உணவுப் பண்டங்களில் முன்பேர வர்த்தகத்தை தடை செய்ய வேண்டும். உணவு தானிய உற்பத்தியை பெருக்கக் கூடிய வகையில் தேவையான ஊக்குவிப்பு அறிவிப்புகளை விவசாயிகளுக்கு அறிவிக்க வேண்டும். பொது விநியோகத் திட்டத்தில் அனைத்து பொருட்களும் அனைவருக்கும் கிடைக்கும் படியாக பொதுவிநியோகத் திட்டத்தை பலப்படுத்த வேண்டும் என மத்திய மாநில அரசுகளை BSNL ஊழியர் சங்கத்தின் தமிழ் மாநில மாநாடு கேட்டுக் கொள்கிறது.

இந்த வருடத்திய நிதி நிலை அறிக்கையின் பெட்ரோல் விலையை லிட்டர் ஒன்றுக்கு ரூ.3/- ம், டீசல் விலையை ரூ. 2.75 ம் மத்திய அரசு உயர்த்தியுள்ளது. நாடு முழுவதும் அனைத்து அத்தியாவசிய பொருட்களின் விலைகள் கடுமையாக உயர்ந்துள்ள இந்த சூழ்நிலையில் பெட்ரோல், டீசல் விலை உயர்வு என்பது மேலும் விலை ஏற்றத்திற்கு வழி வகுக்கும். இந்திய நாட்டு மக்களிடம் வாக்குகளை பெற்று ஆட்சிக்கு வந்துள்ள மத்திய ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு அந்த மக்களை மிகக்கடுமையாக தண்டிக்க கூடிய வகையில் உள்ளது. அரசின் இந்த முடிவை இம்மாநாடு மிக வன்மையாக கண்டிப்பதோடு இந்த பெட்ரோல், டீசல் விலை உயர்வை திரும்ப பெற வேண்டுமென மத்திய அரசை கேட்டுக்கொள்கிறது.

இந்தக் கோரிக்கையை பிரதானமாக முன்வைத்து இந்திய நாட்டு வரலாற்றில் முதன் முறையாக அனைத்து மத்திய தொழிற்சங்கங்களும் இணைந்து 2010, மார்ச் 5ஆம் தேதி நாடு தழுவிய அளவில் மறியல் போராட்டம் நடத்த அறைகூவல் விடுத்துள்ளது. அந்தப் போராட்டத்தில் BSNL ஊழியர்கள் அனைவரும் கலந்து கொண்டு மறியல் போராட்டத்தை வெற்றிகரமாககிட வேண்டும் என பிப்ரவரி 27 முதல் மார்ச் 2 வரை தூத்துக்குடியில் நடைபெறும் BSNL ஊழியர் சங்கத்தின் தமிழ் மாநில மாநாடு அறைகூவி அழைக்கிறது.

முன்மொழிபவர்:- S.சுப்பிரமணியம் மாவட்ட செயலர் கோவை.

வழிமொழிபவர்:- S.நடராஜா மாநில அமைப்புசெயலர் தஞ்சை.

# தீர்மானம் எண்:- 2

## ஓய்வூதியர் பிரச்சனைகள்

50 சதமான பஞ்சப்படி இணைப்புக்கான DPE யின் உத்தரவு01.01.2007க்கு முன் ஓய்வு பெற்றவர்க்கு பொருந்தாது என்பதாலும், விதி 37 A அடிப்படையில் ஒய்வூதியம் மாற்றுவதற்கான எந்த வாய்ப்பும் இல்லாததாலும், 01.01.2007க்கு முன் ஒய்வு பெற்றவர்களுக்கு 50 சதவிகித்த பஞ்சப்படி இணைப்பு என்பது மறுக்கப்பட்டுள்ளது. இது அனைத்து ஓய்வூதியதாரர்களையும் ஒரே மாதிரியாக நடத்திட வேண்டும் எனும் உச்ச நீதிமன்ற தீர்ப்புக்கு எதிராக உள்ளது.

01.01.2000 முதல் 31.07.2001 வரை ஓய்வு பெற்றவர்களுக்கு ஓய்வூதியக் கணக்கீட்டில் குறைபாடு ஏற்பட்டுள்ளது. ஓய்வூதியக் கணக்கீட்டிற்கு இறுதி பத்து மாத சம்பளம் கணக்கெடுக்க வேண்டும் என்பதால் எந்த ஒரு ஊதிய மாற்றம் நடைபெறும் சமயத்திலும் இது போன்று பிரச்னை ஏற்படும். ஐந்தாவது ஊதியக் குழுவும் ஆறாவது ஊதியக் குழுவும் இதற்கு சரியான தீர்வை ஏற்படுத்தி அந்த அநியாய ஓய்வூதிய குறைபாட்டை சரிசெய்தது. ஆனால் BSNLல் BSNL உருவாகி பத்தாண்டுகள் கழிந்த பின்னரும் இந்த பிரச்னை தீர்க்கப்படவில்லை.

DOTயிலிருந்து ஓய்வு பெற்றவர்களுக்கு மருத்துவப் படியாக ரூ.100/- மட்டுமே தரப்பட்டு வருகிறது. பல ஆண்டுகளாக இதே அளவில் தரப்பட்டு வரும் இந்த படியை மருந்துக்களின் விலையேற்றத்தைக் கணக்கில் கொண்டு ஆயிரம் ரூபாயாக உயர்த்த வேண்டும். DOTயிலிருந்து ஓய்வு பெற்றவர்களுக்கான ஒரு மருத்துவத் திட்டம் ஒன்றினை விரைவில் அமுல் படுத்த வேண்டும்.

அனைத்திற்கும் மேலாக, BSNL ஓய்வூதியதாரர்களுக்கு தற்போது IDA ஊதிய விகிதத்தில் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. அதனை CDA ஊதிய விகிதத்தில் மாற்றுவதென மத்திய அரசு முடிவு செய்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. BSNL ஆகும் சமயத்தில் அரசு கொடுத்த உறுதி மொழி மற்றும் அதற்கு பின்னர் வெளியிட்ட பல்வேறு உத்தரவுகளுக்கு எதிரான மத்திய அரசின் இந்த முயற்சியினை BSNL ஊழியர் சங்கத்தின் தமிழ் மாநில மாநாடு வன்மையாக கண்டிக்கிறது.

ஓய்வூதியதாரர்களின் மேற்கண்ட பிரச்சனைகளில் மத்திய அரசு உடனடியாக தீர்வு காணவேண்டும் என தூத்துக்குடி அபிராமி மஹாலில் பிப்ரவரி 27 முதல் மார்ச் 2 வரை நடைபெறும் BSNL ஊழியர் சங்கத்தின் தமிழ் மாநில மாநாடு கேட்டுக்கொள்கிறது.

ஓய்வூதியதாரர்களுக்கென All India BSNL-DOT Pensioners Association என்ற அகில இந்திய அமைப்பு நமது மத்திய சங்கத்தின் முன் முயற்சியால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதன் ஆலோசகராக நமது பொதுச்செயலர் தோழர் V.A.N. நம்பூதரியும், தலைவராக தோழர் A.K.பட்டாசார்ஜியும், செயலராக தோழர் K.G.ஜெயராஜும், உதவி தலைவராக தோழர் S.மோகன்தாஸ் அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாக பல கட்ட போராட்டங்களை முன் நின்று நடத்தி வருகின்றனர். நமது தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் மாட்ட சங்கங்களை அமைக்கவும், அதன் பின்னர் மாநில சங்கத்தை உருவாக்கவும் இந்த மாநாடு தீர்மானிக்கிறது.

முன்மொழிபவர்:- M.ஜெயமுருகன், மாவட்ட செயலர், தூத்துக்குடி.

வழிமொழிபவர்:- C.சுவாமிகுருநாதன், மாநில துணைத்தலைவர், நெல்லை.

# தீர்மானம் எண் : 3

## <u>தீண்டாமையை ஒழிப்போம்</u>

உலகின் வேறு எந்த நாட்டிலும் இல்லாத சாதீய அமைப்பு முறை நமது இந்திய நாட்டில் மட்டும் உள்ளது. வர்ணாஸ்ரம தர்மத்தின் அடிப்படையில் மக்களை பிரித்துள்ள அந்த சாதீய அமைப்பு முறையில் மிகவும் பின் தங்கியவர்களாக தலித்துக்கள மாற்றப்பட்டு உள்ளனர். பல நூறு ஆண்டுகளாக சமூக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவு ஒடுக்கப்பட்டு வரும் அவர்களை இழிதொழிலில் ஈடுபடுத்தி, அதுவே அவர்களது குலத்தொழிலாகவும் திணிக்கப்பட்டு உள்ளது.

இந்த நாகரீக சமுதாயத்தில் இன்னமும் மனித மலங்களை மனிதர்களே சுமக்கும் கொடுமை தொடர்கிறது. பாதாள சாக்கடைகளில் மனிதர்களே இறங்கி சுத்தம் செய்யும் போது விஷ வாயு தாக்கி மரணமடைவதும் தொடர்கிறது. இறந்தவர்களின் உடலை தீக்கிரையாக்கும் மயான ஊழியர்களை அரசு ஊழியர் ஆக்காமல், பிணங்களின் உறவினர்கள் தயவில் வாழ்க்கை நடத்த வேண்டியவர்களாக உள்ள நிலைமையும் தொடர்கிறது. இவர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கி பணி தந்து கொண்டிருந்த அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் ஆளெடுப்பு தடை சட்டத்தாலும், தனியார் மயமாக்கலிலும் தத்தளித்துக்கொண்டுள்ளது.

சக மனிதர்களான இவர்களை தீண்டத்தகாதவர்கள் என்று ஒதுக்கிவைக்கும் கொடுமை பாரத தேசமே வெட்கித் தலை குனிய வேண்டிய கொடுமை. பகுத்தறிவு பகலவன் பெரியார் பிறந்த மண்ணில் இரட்டை டம்ளர் முறை, தீண்டாமை சுவர்கள், பொதுக்கிணற்றில் தண்ணீர் மறுப்பு, ஆலயம் நுழைய மறுப்பு உள்ளிட்ட கொடுமைகள் இன்னமும் தொடர்கிறது.

இவற்றிலிருந்து தலித் மக்களை மீட்டெடுக்கவும், தீண்டாமையை தீயிட்டு பொசுக்கவும், பொருளாதார ரீதியாக அவர்களை மீட்டெடுக்கவும் உறுதி பூண்டு **"தமிழக தீண்டாமை ஒழிப்பு முன்னணி"** அனைத்துப் பகுதி மக்களையும் ஒன்று திரட்டி போராடி வருகிறது. அதில் BSNL ஊழியர் சங்கம் மாநில, மாவட்ட அமைப்புகளில் முழுமையாக தன்னை இணைத்துக் கொண்டு செயலாற்றி வருகிறது.

தீண்டாமை ஒழிப்பு முன்னணியில் அங்கம் பெற்றுள்ள பல அமைப்புகள் ஏதாவது ஒரு பகுதியை தேர்ந்தெடுத்து, அங்குள்ள தலித் மக்களுக்கு முன்னுரிமை வழங்கி அரசுப்பணி தேர்வு மற்றும் இதர தேர்வுகளுக்கு ஒரு நிரந்தர பயிற்சி வகுப்பினை நடத்தி வருகிறது. அந்த அடிப்படையில் நமது தமிழ் மாநிலச் சங்கம் சார்பில் திருப்பூர் மாவட்டத்தில் ஒரு நிரந்தர பயிற்சி வகுப்பினை நடத்தவும், அதற்கான நிதியினை நமது சங்கமே திரட்டுவது என்றும் தூத்துக்குடியில் நடைபெறும் BSNL ஊழியர் சங்கத்தின் தமிழ் மாநில மாநாடு தீர்மானிக்கிறது. மேலும் தீண்டாமைக்கு எதிரான போராட்டங்களில் முழுமையாக பங்கேற்க அனைத்துப் பகுதி தோழர்களையும் இம்மாநாடு அறை கூவி அழைக்கிறது.

முன் மொழிபவர் : N.கொளஞ்சியப்பன், மாநில அமைப்புச் செயலர், பாண்டி.

வழி மொழிபவர் : K.ஜார்ஜ், மாவட்ட செயலர், நாகர்கோயில்.

# தீர்மானம் எண் : 4

## ஒப்பந்த ஊழியர் பிரச்சனை

தமிழகத்தில் 8000 க்கும் மேல் ஒப்பந்த தொழிலாளர்கள் 10 ஆண்டுகளுக்கும் மேலாக ஹவுஸ் கீப்பிங், கேபிள் பழுது பார்க்கும் பணி, துப்புரவு பணி, A/C பராமரிக்கும் பணி, எழுத்தர் பணி ஓட்டுநர் பணி, நான்காம் பிரிவு ஊழியர்கள் பணி என சகல விதமான பணிகளை பார்த்து வருகின்றார்கள். ஆனால் அதற்கு அவர்கள் வாங்கும் சம்பளம் மிகவும் குறைவான நிலையில் உள்ளது. அரசாங்கம் அறிவித்துள்ள ஊதியங்களை அமுல்படுத்த BSNL நிர்வாகம் மறுக்கிறது. BSNLEU மாநில சங்கமும், TNTCWU மாநில சங்கமும் இணைந்து ஒப்பந்த தொழிலாளர்களின் ஊதிய உயர்விற்கு பல்வேறு இயக்கங்களை நடத்தியுள்ளது. உயர்நீதிமன்ற வழக்கிலும் நிர்வாகத்திற்கு சாதகமான தீர்ப்பு கிடைக்கவில்லை. நிரந்தர ஊழியர்கள் ஊதிய உயர்வு பெறுகின்ற இந்த சூழ்நிலையில் நம்மோடு பணிபுரிகின்ற ஒப்பந்த ஊழியர்களுக்கு அரசாங்கம் அறிவித்துள்ள புதிய சம்பளாமான A பிரிவு நகரங்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 180 + DA, B பிரிவு நகரங்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 150 + DA, C பிரிவு நகரங்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 120 + DA, ஊதியத்தை தமிழ் நாடு BSNL மாநில நிர்வாகம் தாமதம் செய்யாமல் உடனே வழங்க வலியுறுத்தி TNTCWU மாநில சங்கத்தோடு இணைந்து மார்ச் 17, 2010 அன்று தமிழகத்தில் LEO அலுவலகம் முன்பு இரு மாநில சங்கங்கள் சார்பாக உண்ணாவிரதம் போராட்டமும் அதன் தொடர்ச்சியான இயக்கங்களையும் நடத்தி ஒப்பந்த ஊழியர்களுக்கு தமிழகத்தில் நியாயமான ஊதியம் பெற்று தர வேண்டுமென இம்மாநாடு தீர்மானிக்கிறது.

முன் மொழிபவர் : S.முத்துக்குமரசாமி, மாநில துணைச் செயலர், கடலூர்.

வழி மொழிபவர் : C.ஞானசேகரன், மாவட்ட செயலர், வேலூர்.

# தீர்மானம் எண் 5
# பங்கு விற்பனை

லாபத்தில் இயங்கும் பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை விற்க மாட்டோம் என UPA-I அரசு தனது குறைந்த பட்ச பொதுத்திட்டத்தில் அறிவித்திருந்தது. இடது சாரி கட்சிகளின் சீரிய தலையீட்டையும் மீறி அவ்வப்போது பங்கு விற்பனையை அமுலாக்கிட முயன்றது. UPA-II அரசில் இடது சாரிகளின் ஆதரவு அவசியம் இல்லையென்றதும், மீண்டும் மத்திய அரசு லாபமீட்டும் பொதுத்துறை நிறுவன பங்குகளை விற்க மத்திய அமைச்சரவையில் முடிவெடுத்து பங்கு விற்பனையை வேகப்படுத்தி வருகிறது. கடந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில் பங்கு விற்பனை மூலம் 20,000 கோடி ரூபாய்களை திரட்டவும், இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில் அதனை 35,000 கோடி ரூபாய்களாக உயர்த்தியும் முடிவெடுத்துள்ளது அரசின் வேகத்தை நமக்கு உணர்த்துகிறது.

BSNL நிறுவனத்தின் பங்குகளை மத்திய அரசு விற்றிட பல முறை முயன்ற போதெல்லாம் நமது சங்கம், தனியாகவும், United forum/Joint Forum மற்றும் மத்திய தொழிற்சங்கங்களுடன் இணைந்து கூட்டாக போராடி தடுத்து வருகிறது. “கண்ணை விற்று சித்திரம் வாங்கும்” மத்திய அரசின் போக்கை ஊழியர்கள் மத்தியில் வலுவாக கொண்டு சென்று பங்கு விற்பனைக்கு எதிராக ஒட்டு மொத்த ஊழியர்களையும் திரட்டி பல கட்ட போராட்டங்களையும் நடத்தியுள்ளோம்.

INTUC, BMS உள்ளிட்ட மத்திய சங்கங்கள் கூட இன்று மத்திய அரசின் பங்கு விற்பனைக்கு எதிரான போராட்டங்களில் கலந்துக் கொள்வது என்பது ஊழியர்கள் மத்தியில் பங்கு விற்பனைக்கு எதிரான உணர்வுகளை வெளிக்காட்டுவதாக உள்ளது. இந்த பரந்து பட்ட ஒற்றுமையை பாதுகாத்து நாம் பொதுமக்கள் மத்தியில் கொண்டு செல்ல இம்மாநாடு உறுதியேற்கிறது.

BSNLல் ஒரு சதவிகித பங்குகளைக்கூட இன்று வரை விற்க நாம் அனுமதிக்கவில்லை. இனியும் அனுமதிக்க மாட்டோம். அனைத்து பகுதி ஊழியர்கள், பொதுமக்கள் ஆதரவுடன் கூடிய கூட்டு இயக்கத்தின் மூலம் பங்கு விற்பனையை தொடர்ந்து தடுத்திட வேண்டும் என்று இந்த மாநாடு தீர்மானிக்கிறது.

முன் மொழிபவர் : S.அழகிரி சாமி, மாவட்ட செயலர், தருமபுரி.

வழி மொழிபவர் : R.அருணன், மாநில அமைப்புச்செயலர், சென்னை.

# தீர்மானம் எண் 6
# ஊதிய மாற்றம்

DOT யிலிருந்து BSNL பொதுத்துறை நிறுவனமாக மாற்றப்பட்ட பின் 2002-ல் IDA ஊதியமாக மாற்றப்பட்டது. அதில் நமது பொதுச்செயலர் தோழர் V.A.N. நம்பூதிரி அவர்கள் தான் முதல் கையொப்பமிட்டார்.

UF கூட்டணியின் சார்பில் 07.08.2008 ல் ஊழியர்களுக்காக ஊதிய மாற்றம் குறித்து Memorandum கொடுக்கப்பட்டது. நமது தொடர்ந்த முயற்சியால் ஒரு வேலை நிறுத்த அறிவிப்பு கொடுத்த பின்னணியில் ஊதிய மாற்றத்திற்கான குழு அமைக்கப்பட்டது.

கடந்த காலங்களில் ஊழியர்களுக்கு முதலில் சொற்ப ஊதிய மாற்றத்தை வழங்கிவிட்டு அதிகாரிகளுக்கு அதிகமான ஊதிய மாறுதல் வழங்கப்பட்டு வந்தது. அதனை இந்த முறை நாம் விழிப்புடன் இருந்து அதிகாரிகளுக்கு முதலில் ஊதிய மாறுதல் கொடுத்த பின் அதன் பின்னணியில் ஊழியர்களுக்கு ஊதிய மாறுதலை அமுலாக்க வேண்டும் என்று முடிவு செய்தோம். அதன் அடிப்படையில் பிப்ரவரி 2009 ல் ராவ் கமிட்டி பரிந்துரைபடி அதிகாரிகளுக்கு ஊதிய மாறுதல் அமுலாக்கப்பட்டது. அதன் படி அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட அனைத்து சலுகைகளையும் நாமும் பெற்றுள்ளோம்.

15.01.2010 அன்று ஊதிய மாறுதலுக்காக நியமிக்கப்பட்ட கமிட்டியின் பரிந்துரையில் ஊழியர் தரப்பிலும் மற்றும் நிர்வாக தரப்பிலும் கையெழுத்திடப்பட்டுள்ளது. NFTE – FNTO கூட்டணியின் தவறான பிரச்சாரங்களை முறியடித்து, நிர்வாகத்தின் பிடிவாத போக்கை தகர்தெரிந்து அனைத்து ஊழியர்களின் ஆதரவோடு ஊதிய மாறுதல் காணப்பட்டுள்ளது.

யாருடைய துணையுமின்றி, தன்னந்தனியாக வேலை நிறுத்தம் உட்பட போராட்டங்களை நடத்தி இந்த இமாலய வெற்றியை, வரலாற்று சிறப்புமிக்க ஒப்பந்தத்தை கண்டுள்ள BSNLEU தலைமையிலான United Forum த்தை இந்த மாநாடு மனதார பாராட்டுகிறது.

முன் மொழிபவர் : S.தமிழ்மணி, மாநில அமைப்புச்செயலர், சேலம்.

வழி மொழிபவர் : M.குருசாமி, மாவட்ட செயலர், கும்பகோணம்.

# தீர்மானம் எண் 7
# பதவி உயர்வு கொள்கை

தொலை தொடர்பு தொழிற் சங்க வரலாற்றில் ஒரு புதிய முயற்சியாக அனைவருக்கும் ஒரு குறிப்பிட்ட கால அளவில் பதவி உயர்வு வழங்கப்படவேண்டும் என்று நமது மத்திய சங்கம் தொடர்ந்து வலியுறுத்தி வந்தது.

முன்னதாக அங்கீகரிக்கப்பட்ட சங்கமாக NFTE-FNTO இருக்கும் போது புதிய பதவி உயர்வு கொள்கை சம்பந்தமாக ஏதும் கருத்துகளை முன்வைக்காமல் ஏற்கனவே இருக்கும் OTBP/BCR திட்டமே போதுமானது என்றும் அடுத்த ஊதிய மாறுதல் வரை (31.12.2006) இந்த திட்டம் தொடரலாம் என்றும் 2003-ல் BSNL நிர்வாகத்திடம் ஒத்துக்கொண்டது.

மேற்கண்ட உடன்பாட்டை சுட்டி காண்பித்து நிர்வாகம் புதிய பதவி உயர்வு கொள்கையை 01.01.2007 முதல் தான் அமுலாக்க முடியும் என்று பிடிவாதமாக தெரிவித்தது. நமது தொடர்ந்த போராட்டத்தால் நிர்வாகத்தின் பிடிவாதத்தை தகர்த்தெறிந்து முதல் பதவி உயர்வு 01.10.2004 முதல் அமுலாக்கப்படும் என்றும், 01.04.2008 முதல் Arrears வழங்கப்படும் நமது மத்திய சங்கம் உடன்பாடு கண்டுள்ளது.

மேலும் இந்த பதவி உயர்வு திட்டத்தில் முத்தாய்ப்பாக அதிகாரிகள் சம்பள விகிதமான 9850 வை எந்தவிதமான பரிட்சை இல்லாமல் சாதாரண ஊழியர்கள் அடைவார்கள் என்றும் ஒப்பந்தம் எட்டியுள்ளது. நிர்வாகம் 9200 ஊதிய விகிதத்திற்கு DPE ஒப்புதல் தேவை எனச்சொல்லி காலதாம் செய்கிறது. இந்த சூழ்நிலையில் நிர்வாகத்தை வற்புறுத்தி 9200 ஊதிய விகிதத்தை நிலுவையில் வைத்து ஒப்பந்தத்தை உடனடியாக அமுலாக்க ஒத்துக்கொள்ள வைத்துள்ளது. 25 ஆண்டு காலமாக இரண்டே பதவி உயர்வு மட்டுமே பெற்று வந்த ஊழியர்களுக்கு புதிய பதவி உயர்வு கொள்கையின் முலமாக நான்கு பதவி உயர்வினை பெற்று தந்த நமது மத்திய சங்கத்தை இந்த மாநாடு மனதார பாராட்டுகிறது.

முன் மொழிபவர்: S.தங்கவேலு, மாவட்ட செயலர், ஈரோடு.

வழி மொழிபவர் : T.K.சீனிவாசன், மாநில அமைப்புச்செயலர், மதுரை.

# தீர்மானம் எண் 8
# மகளிர் குறித்த தீர்மானம்

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக ஆணாதிக்க சிந்தனையின் வலுவான அடிமைதனமாக உள்ள இந்திய நாட்டின் கட்டமைப்பில் அரசியலில் பெண்கள் பங்கேற்பு பலவீனமாகவே உள்ளது. வறுமையிலும், வேலையின்மையாலும், உணர்வின்மையிலும் ஆழ்ந்து கிடக்கின்ற மகளிரை அவற்றிலிருந்து விடுவிப்பதும், அரசியல் தலைமையேற்கச் செய்வதும் தொலைதூர திட்டம் என்றாலும் கானல் நீரல்ல. மத்திய அமைச்சரவையால் ஒப்புதலளிக்கப்பட்டுள்ள, “சட்டமன்றம், பாராளுமன்றத்தில் மகறிருக்கு 33% இட ஒதுக்கீடு” மசோதா உடனையாக சட்ட வடிவம் பெற வேண்டும் என இம்மாநாடு கோருகிறது.

95% ஆக இருக்கிற முறைசாரா பெண் தொழிலாளர்களுக்கு சம உதியம் மகப்பேறு நிதி, விடுப்புகள் உள்ளிட்ட சட்டபூர்வ சலுகைகள், காகிதத்திலிருந்து நடைமுறைக்கு மாற உரிய நடவடிக்கைகள் எடுக்குமாறு மத்திய மாநில அரசுகளை வலியுறுத்துகிறது.

பேருந்துகளில் மகளிருக்கு முன்னிருக்கைகள் ஒதுக்கப்படுவதோடு, உத்தரவாதம் செய்யப்பட வேண்டும். டூப்பிரச்சனையில் கேரள போக்குவரத்து கழக நடைமுறை தமிழகத்தில் கறாராக கடைபிடிக்க வேண்டும்.

- BSNL பெண் ஊழியர் மகப்பேறு விடுப்பு 180 நாட்கள் என்ற உத்தரவு, மத்திய அரசு உழியருக்கு அமுலாக்கப்பட்ட நாளிலிருந்து முன் தேதியிட்டு அமுலாக்கப்பட வேண்டும்.
- Child Care Leave 2 ஆண்டுகள் எந்த நிபந்தனையின்றி அமுலாக்கப்பட வேண்டும்.
- 45 வயதுக்கு மேற்பட்ட பெண் ஊழியர்களுக்கு சிறப்பு மருத்துவ விடுப்பு அளிக்கப்பட வேண்டும்.
- 55 வயதுக்கு மேற்பட்ட பெண் ஊழியர்கள், விருப்ப மாற்றல் கோரிக்கை நிர்வாகத்தால் பரிவோடு பரிசீலிக்கப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டும்.

முன் மொழிபவர் : M.பெருமாள்சாமி, மாவட்ட செயலர், விருதுநகர்.

வழி மொழிபவர் : K.R.ரவி, மாவட்ட செயலர், நீலகிரி.